யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2016
## Term Examination, March - 2016

தரம் :- 12 (2017) | மனைப்பொருளியல் | மூன்று மணித்தியாலங்கள்

### பகுதி - I

1) மனையின் பகுதியில் ஆற்றப்படும் பல்வேறு செயற்பாடுகளை குறைந்த சிரமத்தில் உச்ச வசதிகளைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் மனையின் பகுதிகள் அருகருகே திட்டமிடல்
1) நெகிழும் தன்மை
2) திசைமுகம்
3) கூட்டமைப்பு
4) நடமாடல்
5) பாதுகாப்பு

2) காற்றோட்டத்தையும் ஒளியையும் ஏற்படுத்தும் செயற்கை முறைகளில் ஒன்று
1) கதவுகள்
2) யன்னல்கள்
3) வலையடித்தல்
4) வெவ்வேறு வடிவக் காற்றோட்டத் துவாரங்கள்
5) வளி பதனாக்கல்

3) நான்கு பேர் கொண்ட குடும்பம் வசிக்கும் மனையின் படுக்கையறை அமையவேண்டிய சதுர அடி எவ்வளவு?
1) 80 சதுர அடி
2) 120 சதுர அடி
3) 90 சதுர அடி
4) 110 சதுர அடி
5) 160 சதுர அடி

4) ஒரு பொருளின் மேற்பரப்பை தொட்டுப்பார்க்கும் போது உணரப்படும் தன்மையினைக் காட்டுவது
1) கோடு
2) வடிவம்
3) இழையமைப்பு
4) நிறம்
5) செயற்பாட்டுப் பொருத்தம்

5) நிறங்களுக்கிடையில் சமனிலையை ஏற்படுத்துவதன் மூலம் எதனைப் பெறலாம்?
1) உறுத்தல்
2) ஓய்வு
3) அழகு
4) இசைவு
5) சந்தம்

6) ஒரு நிறச்சக்கரத்தில் ஒரு நிறத்துடன் அதன் அருகேயுள்ள இணைந்த நிறத்தைச் சேர்ப்பதன் மூலம் ஏற்படும் நிற இசைவு
1) கலப்புநிற இசைவு
2) எதிர்நிற இசைவு
3) அயல்நிற இசைவு
4) மும்மைநிற இசைவு
5) இரட்டை மிகை நிரப்பு நிற இசைவு

7) மனையிற்கு வர்ணம் பூசுவதில் நடுநிலைநிற அதிக அளவிலும் பிரகாசமான நிறங்கள் குறைந்த அளவிலும் பயன்படுத்தும் நிற இசைவு
1) கலப்புநிற இசைவு
2) எதிர்நிற இசைவு
3) ஒத்தநிற இசைவு
4) அழுத்த நடுநிலைநிற இசைவு
5) பிளவு மிகைநிரப்பு நிற இசைவு

8) பழங்கள் அளவிற்கு அதிகமாகப் பழுக்கும் போது அதில் காணப்படும் வெல்லம் யாது?
1) புரற்றோசு
2) கலற்றோசு
3) மோல்ரோசு
4) புரக்ரோசின்
5) மோல்றோசு

9) ஒலிக்கோ சக்கரைட்டுக்கள் அடங்கியுள்ள உணவுகள்?
1) கடலை, சம்பா அரிசி
2) சோயா அவரை, தீட்டலரிசி (சிவப்பு)
3) பருப்பு, சோயா
4) பயறு, உடையல் அரிசி
5) தீட்டலரிசி (சிவப்பு), கௌபி



agaram.lk
Scanned with CamScanner

10) பாலில் உள்ள கப்ரிக்கமிலத்தில் காணப்படும் காபன் அணுக்களின் எண்ணிக்கை

1) 4 2) 5 3) 18 4) 10 5) 20

11) காபோவைதரேற்றில் காணப்படும் இரசாயனக் கட்டமைப்பில் காபனும் ஒட்சிசனும் என்னென்ன விகிதத்தில் அமைந்துள்ளன?

1) 2 : 1 2) 1 : 1 3) 4 : 2 4) 6 : 1 5) 12 : 1

12) எலும்புகளில் காணப்படும் புரதமானது

1) அல்புமின் 2) இலகுமின் 3) ஜெலற்றின்
4) கேசின் 5) மயோசின்

13) அமைதியான ஆட்கொல்லி (Silent killer) நோய் என அழைக்கப்படுவது

1) நீரிழிவு 2) ஆஸ்மா 3) இரைப்பை அழற்சி
4) உயர்குருதியமுக்கம் 5) இருதயநோய்

14) மனித உடலில் அமைந்துள்ள மிகப்பெரிய சுரப்பி

1) சதையி 2) ஈரல் 3) பித்தப்பை
4) இரப்பை 5) சிறுநீரகம்

15) கர்ப்பிணிப் பெண்ணில் அயடின் குறைபாட்டினால் ஏற்படும் விளைவுகளில் பொருத்தமற்றது

1) குழந்தை இறந்து பிறத்தல்
2) நிறை குறைந்த குழந்தை பிறத்தல்
3) மூளை வளர்ச்சி, மனோ வளர்ச்சி குன்றிய பிள்ளை பிறத்தல்
4) அடிக்கடி கருச்சிதைவு ஏற்படல்
5) ஆரோக்கியமான குழந்தை பிறத்தல்

16) சீனி, மதுசாரம் போன்றவற்றில் நன்கு வளரும் நுண்ணுயிர்கள் யாது?

1) பூஞ்சனம் 2) பெனிசிலியம் 3) பக்றீரியா
4) ஈஸ்ட் 5) பங்கசு

17) மனித உடலில் காணப்படும் பற்றீரியா மூலம் உற்பத்தியாகும் உயிர்ச்சத்துக்கள்

1) A யும் C யும் 2) B யும் C யும் 3) B யும் K யும்
4) K யும் E யும் 5) A யும் K யும்


agaram.lk

18) உடற்திணிவுச் சுட்டியைக் கண்டறியும் முறை

1) $\frac{\text{உயரம் } cm^2}{\text{நிறை } kg^2}$ 2) $\frac{\text{உடல் நிறை } kg}{\text{உயரம்}^2\ cm}$ 3) $\frac{\text{உடல் நிறை } kg^2}{\text{உயரம் } cm}$

4) $\frac{\text{உயரம் } cm}{\text{உடல் நிறை } kg}$ 5) $\frac{\text{உயரம்}}{\text{உடல் நிறை}}$

19) கீழே காணப்படுவன எப்போசணையின் கட்டமைப்பாகும்?



1) கிளைசின்
2) கொழுப்பு
3) கிளிசறோல்
4) இலுப்பேசு
5) அலனின்



Scanned with CamScanner

20) * அதிர்ச்சியை உறிஞ்சுவது.
* உராய்வு நீக்கியாகத் தொழிற்படுவது.
* பாதுகாப்பை வழங்குவது.
* சக்தியை வழங்குவது.

போன்ற தொழில்களை செய்வன
1) புரதம்
2) அமினோஅமிலம்
3) கொழுப்பு
4) குளுக்கோசு
5) உயிர்ச்சத்துக்கள்

21) மாணவி ஒருவர் செய்த பரிசோதனையில் செறிவுள்ள நைத்திரிக்கமிலம் சொற்பளவு சேர்த்தபோது அவை மஞ்சள் நிறமாகியது. எனவே பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட உணவு யாது?
1) மாப்பொருள் உணவு
2) புரத உணவு
3) கொழுப்புணவு
4) கிளிசரோல்
5) அமினோஅமிலம்

22) போசணைப் பிரச்சியில் அல்லூட்டம் என அழைக்கப்படுவது
1) அதிகூடிய போசாக்கு (மிகையான)
2) முறையற்ற போசாக்கு
3) குறைந்த அளவிலான போசாக்கு
4) உக்கிரமான குறை போசாக்கு
5) மேற்கூறியவை யாவும் பிழை

23) உடற்திணிவுச்சுட்டிப் பெறுமானத்தில் சர்வதேச ரீதியில் அனுமதிக்கப்பட்ட / சாதாரண உடல்நிறை
1) 25.0 - 30.0 வரை
2) 18.5 - 25.0 வரை
3) 18.5 இலும் குறைய
4) 30.0 இற்கு மேல்
5) 22.5 - 25.0 வரை

24) மனிதனைப் பீடிக்கும் தொற்றா நோய்களில் பொருத்தமற்றது
1) நீரிழிவு
2) புற்றுநோய்
3) என்பு சுழல்வாதம்
4) நெருப்புக்காய்ச்சல்
5) இரப்பை அழற்சி நோய்

25) * பொதிகள் நிரப்பப் பயன்படும்.
* திரவத்தில் கரையும்.
* pH பெறுமானத்தைக் குறைக்கும்.
* நுண்ணங்கிகளின் செயற்பாட்டைக் குறைக்கும்.

1) $CO_2$ வாயு
2) $N_2$ வாயு
3) $O_2$ வாயு
4) H வாயு
5) S வாயு

26) அயடீன் உப்பு பயன்படுத்தலில் சிறந்த அனுகூலத்தைப் பொற்றுக்கொள்ள வேண்டுமாயின் பின்வரும் செயற்பாட்டில் பொருத்தமற்றவை
1) உப்பைக் கழுவாது பயன்படுத்தல்
2) சூரியஒளி படாதவாறு பயன்படுத்தல்
3) கபிலப் போத்தலில் சேமித்தல்
4) சமைத்துச் சூடாறிய பின் உப்பைச் சேர்த்தல்
5) சமைக்க முன்பே உப்பைச் சேர்த்தல்

27) ஒன்பது மாதத்திற்குட்பட்ட குழந்தைகளுக்கு வழங்கப்படும் உயிர்ச்சத்து A அளவு
1) உயிர்ச்சத்து A 100000 சர்வதேச அலகு
2) உயிர்ச்சத்து A 200000 சர்வதேச அலகு
3) உயிர்ச்சத்து A 50000 சர்வதேச அலகு
4) உயிர்ச்சத்து A 25000 சர்வதேச அலகு
5) உயிர்ச்சத்து A 1,50000 சர்வதேச அலகு

28) குழந்தை பிறப்பின் பின் பாலூட்டலைத் தூண்டுவது
1) இலக்ரோ அல்புமின்
2) புரோ இலக்டின்
3) மோல்ரோசு
4) கல்சியம் இலக்டேசு
5) விற்றா அல்புமின்



agaram.lk
Scanned with CamScanner

29) பின்பிள்ளைப் பருவத்தில் ஏழு வயதுப் பெண் பிள்ளைக்குரிய பொருத்தமான நிறையும் உயரமும்
1) 145 cm உயரமும் 35 kg நிறையும்
2) 125 cm உயரமும் 23 kg நிறையும்
3) 135 cm உயரமும் 29 kg நிறையும்
4) 132 cm உயரமும் 26 kg நிறையும்
5) 154 cm உயரமும் 45 kg நிறையும்

30) * ஒருதிசையில் மாத்திரம் செல்லவிடும்.
* நீர் மீள்பாய்தலையும் தடுப்பது.
மேற்கூறியவற்றின் செயற்பாட்டைப் புரியும் வால்வு
1) நிறுத்தல் வால்வு 2) குண்டு வால்வு 3) அடி வால்வு
4) கம்பக்குழாய் வால்வு 5) படலை வால்வு

31) கூட்டுப்பசளை தயாரிப்பில் நைதரசனைப் பெறுவதற்கு எவ்வாறான பொருள் சேர்க்கப்படுகிறது?
1) நீர்த்தாவரங்கள் 2) சாணிக்கரைசல் 3) விலங்குக் கழிவு
4) யூரியாக்கரைசல் 5) சமயலறைக்கழிவு

32) அழுக்குகளை வகைப்படுத்தலுக்கு கடதாசி வகைக்குப் பொருத்தமான நிறங்கள்
1) பச்சைநிறம் 2) நீலநிறம் 3) சிவப்புநிறம்
4) கபிலநிறம் 5) செம்மஞ்சள் நிறம்

33) ஈரலில் காணப்படக்கூடியது
1) குளுக்கோசு 2) கிளைக்கோஜன் 3) இலற்றோசு
4) கலற்றோசு 5) மோல்ற்றோசு

34) மீள்சுழற்சிக்கு உட்படுத்தக்கூடிய பிளாஸ்ரிக் பொருட்களில் பொருத்தமற்றவை
1) யோக்கட்கப் 2) உடைகொழுவி 3) குளிருட்டி உள்ளறைப் பகுதி
4) வாகன மேலுறைப்பகுதி 5) பிளாஸ்ரிக் பேணிகள்

35)



I




II

இங்கு தரப்படும் அலங்காரத் தையல்கள் முறையே
1) நரம்புத்தையல், சங்கிலித் தையல்
2) ஈயுருத்தையல், மீன்முள்ளுத் தையல்
3) சங்கிலித்தையல், ஈயுருத் தையல்
4) முறுக்குவடத் தையல், ஜேர்மன் முடிச்சுத் தையல்
5) ரூமேனியன் தையல், மீன்முள்ளுத் தையல்


36) துணியில் சுற்றிவர விளிம்பை மடித்துப் பெருநூல் ஓடிய பின் சோம்தையல் அல்லது பொறித்தையல் இடல் என்பது
1) விளிம்புமுடித் தையல்
2) விளிம்புத் தையல்
3) ரேந்தை பிடித்தல்
4) பற்கத்தரிக்கோலால் வெட்டுதல்
5) நாடா பிடித்தல்



agaram.lk
Scanned with CamScanner

37) 

நீளப்பக்கத் தோற்றம்



குறுக்குவெட்டுமுகத் தோற்றம்

மேல் தரப்பட்ட வரைபடங்கள் இரண்டு வெவ்வேறு நார்களுக்குரியவை

1) பருத்தி, பட்டு
2) பட்டு, ரேயோன்
3) கம்பளி, நைலோன்
4) லினன், கம்பளி
5) பருத்தி ரேயோன்

38) துணியினை இனங்காண்பதற்கு மாணவி ஒருவர் செய்த பரிசோதனை முடிவுகள் கீழே தரப்பட்டுள்ளன. அவை எந்நாரைக் குறிக்கும்?

- மென்மையானது
- குளிர்மையானது
- பலம் வாய்ந்தது
- வழுக்கும் தன்மை கொண்டது

1) இலினன்
2) பருத்தி
3) பட்டு
4) கம்பளி
5) நைலோன்

39) நீரில் நிலையற்ற வன்மையை ஏற்படுத்தும் உப்பானது

1) கல்சியம் காபனேற்று
2) மக்னீசியம் நைதிரேற்று
3) கல்சியம் குளோரைட்டு
4) மன்னீசியம் காபனேற்று
5) மக்னீசியம் இருகாபனேற்று

40) சேகரித்து வைக்கும் நீர்நிலையில் பாசி போன்ற நுண் தாவரங்கள் வளர்வதைத் தடுப்பதற்கு ஆபத்து விளைவிக்காத அளவில் சேர்க்கப்படும் இரசாயனப்பொருள்

1) பொற்றாசியம் பரமங்கனேற்று
2) குளோரின்
3) பிளீச்சிங் பவுடர்
4) கல்சியம் காபனேற்று
5) சோடியம் இருகாபனேற்று

(40 x 1 = 40 புள்ளிகள்)

agaram.lk

## பகுதி - II

**முதலாம் வினா உட்பட ஏனையவற்றில் நான்கும் எல்லாமாக 5 வினாவிற்கு விடை தருக.**

1. ஆரம்ப வகுப்புக்கள் கொண்ட பாடசாலையில் வருடத் தொடக்கத்தில் கால்கோள்விழா கொண்டாடப்பட்டு வருகின்றன. நகர்ப்புறத்தை அண்டிய சிறிய பாடசாலையில் கால்கோள் விழா நடைபெற்றன. அங்கு சிற்றுண்டிக்குப் பதிலாக பயறு கலந்த பாற்சோறு கட்ட சம்பலும், ஈற்றுணவாக வாழைப்பழமும் பொதிசெய்யப்பட்டு வழங்கப்பட்டன. இவ்விழாவில் கலந்துகொண்ட அனைவரும் இச்செயற்பாட்டைப் பாராட்டிச் சென்றனர்.

1) பயறு கலந்த பாற்சோறில் காணப்படும் போசணையை விபரிக்குக.
2) முளைகொண்ட பயறில் காணப்படும் போசணை யாது?
3) பழச்சலாது தயாரிக்கும் முறையினை விபரிக்குக.
4) பின்பருவப் பிள்ளைக்கு வழங்கக்கூடிய மதிய உணவுப் பட்டியல் ஒன்றைத் தயாரிக்க.

**(4 x 5 = 20 புள்ளிகள்)**



Scanned with CamScanner

**2.**

1) வரவேற்பறை ஒன்றின் தளத்திட்டத்தினை வரைந்து அங்கு இடக்கூடிய தளபாடங்களை குறியீடுகள் மூலம் குறிப்பிடுக.

2) படுக்கையறை ஒன்றிற்குத் திட்டக்கூடிய பொருத்தமான நிற இசைவைக் குறிப்பிடுக.

3) மனையின் அழகினை அதிகரிப்பதற்காக பயன்படுத்தப்படும் அடிப்படை அம்சங்களைத் தருக.

(10 புள்ளிகள்)

**3.**

1) உணவாக உட்கொள்ளக்கூடிய நார்ப்பதார்த்தங்களை வகைப்படுத்துக.

2) போசணை என்பதனை வரைவிலக்கணப்படுத்துக.

3) உணவு நொதித்தலால் அதிகரிக்கப்படும் போசணைப் பெறுமானத்தைக் குறிப்பிடுக.

(10 புள்ளிகள்)

**4.**

1) உடலில் ஓமோன்களின் சுரப்பு குறைபாடு காரணமாக ஏற்படும் தொற்றா நோய்களைக் குறிப்பிட்டு அவை உடலில் ஏற்படுத்தும் விளைவைக் குறிப்பிடுக.

2) ஒருவரின் உணவுச் சுட்டியில் கட்டாய அளவில் பேணவேண்டிய அவசியம் பற்றி விளக்குக.

3) உணவுப் பொருளுக்குப் பொதி செய்தலில் பொதியிடு பொருள் தொடர்பாக மாணவர் திரட்டிய விடயங்கள் நான்கு தருக.

(10 புள்ளிகள்)

**5.**

1) பின்பிள்ளைப் பருவத்தில் உடல் இயக்க வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் நான்கு தருக.

2) பின்பிள்ளைப் பருவத்தினர் தமது மனவெழுச்சிகளை எவ்வாறான வழிகளில் வெளிக்காட்டுவர்?

3) மனித சமுதாயத்தின் உருவாக்கத்தில் மொழி விருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் யாவை?

(10 புள்ளிகள்)

**6.**

1) பெண்பிள்ளையின் பாடசாலைச் சீருடையில் பின்பற்றப்படும் தையல் நுட்ப முறைகள் 4 தருக.

2) அடுக்கு நாணயவுருத் தையல்
நீள்குறுந் தையல்
மேற்குறிப்பிட்ட தையல்கள் எவ்வெவற்றிற்குப் பயன்படுகின்றன என்பதையும் அதனை வரைந்து காட்டுக.

(10 புள்ளிகள்)

**7.**

1) இலங்கையில் காணப்படும் போசாக்குக் குறைபாடுகளை நீகுவதற்கு பாடசாலை மட்டத்தில் ஆய்வுக்குட்படுத்திய மாணவர்கள் கற்கும் தரங்கள் யாவை?

2) பாடசாலை மாணவர்களில் பின்தங்கிய கிராமத்தில் வசிப்பவர்களை ஆய்வுக்குட்படுத்தியபோது குருதிச்சோகை, பார்வைக்குறைபாடு என்பவற்றால் பீடிக்கப்பட்டவர்கள் இனங்காணப்பட்டனர். அதனை நீக்க எடுக்கும் நடவடிக்கை யாது?

3) சுகாதார அமைச்சின் போசணைப் பிரிவுடன் தொடர்புடைய நிறுவனங்கள் நான்கு தருக.

(10 புள்ளிகள்)



agaram.lk
Scanned with CamScanner

யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2016

## Term Examination, March - 2016

தரம் :- 12 (2017) | புள்ளித்திட்டம் | மனைப்பொருளியல்

### பகுதி - I

| | | | | |
|---|---|---|---|---|
| 1) 3 | 9) 3 | 17) 3 | 25) 1 | 33) 2 |
| 2) 5 | 10) 4 | 18) 2 | 26) 5 | 34) 5 |
| 3) 2 | 11) 2 | 19) 3 | 27) 1 | 35) 2 |
| 4) 3 | 12) 3 | 20) 3 | 28) 2 | 36) 2 |
| 5) 2 | 13) 4 | 21) 2 | 29) 2 | 37) 5 |
| 6) 1 | 14) 2 | 22) 2 | 30) 3 | 38) 1 |
| 7) 4 | 15) 5 | 23) 2 | 31) 2 | 39) 2 |
| 8) 4 | 16) 4 | 24) 4 | 32) 2 | 40) 1 |

### பகுதி - II

1.

1) பயறு - புரதம், தவிட்டரிசி - $B_1$ $B_2$ செலுலோசு, மாப்பொருள், தேங்காய்ப்பால் - கொழுப்பு
2) சமிபாடு இலகுவாக்கும், உயிர்ச்சத்து B யும் Cயும் அதிகரிக்கும், அத்தியாவசிய அமினோஅமிலம் அதிகரிக்கும், போசணைத்தரம் அதிகரித்தல்
3) மாணவர் விடை
4) மாணவர் விடை

agaram.lk

2.

1) மாணவர் விடை
2) தனிநிற இசைவு - கடும் ஊதா, இளநிறஊதா
   கலப்புநிற இசைவு - மஞ்சள், மஞ்சட் செம்மஞ்சள்
3) கோடு, இழையமைப்பு, நிறம், வடிவம்

3.

1) உணவாகஉட்கொள்ளக்கூடியபதார்த்தங்கள்

   - நீரில் கரையக்கூடிய நார்கள்
     பெப்திக்
     பிசின்
     உ-ம் : பழம் காய்கறி
   - நீரில் கரையாத நார்கள்
     செலுலோசு,அரைச்செலுலோசு,
     இலிக்னின்
     உ-ம் : தானியஉமி, தவிடு,
     உ.கிழங்குதோல்

2) மனித உடலால் உட்கொள்ளப்படும் உணவுகளில் அடங்கியுள்ள போசணைகள் அகத்துறிஞ்சல் அனுசேபம் ஆகிய செயற்பாட்டிற்கு உட்பட்டு உடல் வளர்ச்சி, சக்தி, பாதுகாப்பு தொழிற்பாடுகளுக்கு பயன்படுவது போசணையாகும்.
3) உணவு நொதித்தலுக்கு உட்படுவதால், விற்றமின்கள் $B_1$, $B_2$, C அதிகரிக்கும், அமினோஅமிலம் இலகுவாகச் சமிபாடடையும், $B_{12}$ உணவுசேரும், சுவை/உண்டிவிருப்பு அதிகரிக்கும்.



Scanned with CamScanner

**4.**

1) நீரிழிவு : இன்சுலின் ஓமோன் சுரப்பு குறைவினால் குருதியில் வெல்லமட்டத்தைக் கட்டுப்படுத்த முடியாது. மேலதிக குளுக்கோசு கிளைக்கோஜனாக சேமிக்கப்பட மாட்டாது. இதனால் குருதியில் வெல்ல மட்டம் உயரும்.

2) ஒருவரின் உயரத்திற்கேற்ப நிறை காணப்படுவதைக் குறிப்பது உடற்திணிவுச் சுட்டியாகும். இது 18 - 25.0 வரைவீச்சு உள்ளது. இதனால் ஆரோக்கியத்தை குறிக்கும். எனவே தொற்றா நோய்கள், மிகைக்கொழுமை நீரிழிவு, இருதயநோய், கொலஸ்ரோல் போன்றவை ஏற்படாது இக்காரணங்களினால் ஒருவர் நீண்டகாலம் ஆரோக்கியமாக வாழலாம்.

3) உணவிற்குப் பொருத்தமான பொதியிடுபொருள், வளிநீர் உட்செல்லாதவாறு அமைதல், நச்சுத்தன்மை ஏற்படுத்தாததாக இருத்தல், சுகாதார பாதுகாப்பு காணப்படல், முத்திரையிட இலகு.

**5.**

1) முதிர்ச்சி, சூழல், போசாக்கு, உடற்பயிச்சி, கிடைக்கும் வாய்ப்பு வசதிகள்

2) பேசாதிருத்தல், மறைமுகமானசிந்தனை, பேசமறுத்தல், சண்டைபிடித்தல், சிலசந்தர்ப்பங்களில் பின்னடைதல், எந்தவிடயத்திலும் இணங்காதிருத்தல்

3) அறிவாற்றல் மட்டம், சிறந்த பண்பாட்டுப் பின்னணி, மூத்தோரின் சிறந்த பேச்சுப் பாங்கு, சொற்களைத் திருத்தமான உச்சரித்தல், பொருத்தமான கற்பித்தல் முறைகள், பிள்ளைகளிடத்தே காணப்படும் ஆர்வம், ஊக்கமளித்தல், தூண்டுதல், பேச்சு, கேட்டல் புலனுறுப்புக்களின் ஆரோக்கியம், மூத்தோரையும் சமவயதினரையும் போன்று பின்பற்றல்

**6.**

1) வேல் மடிப்பு - ஒருபக்கக் கூர்முனை வேல்மடிப்பு, மடிப்புக்கள் - கத்திமடிப்பு, பெட்டிமடிப்பு, தலைகீழ் பெட்டிமடிப்பு, திறப்புக்களை மூடுதல் - தெறியும் ஓட்டையும், அமுக்கத்தெறி, திறப்புக்கள் - தொடர் துண்டுத் திறப்பு, விளிம்பு சீராக்கம் - விளிம்புதைத்தல் (பாவாடைக் கீழ் மடிப்பு), பொருத்து - சாதாரண பொருத்து, பொருத்து ஓரங்கள் கம்பளித்தையல்

2) அடுக்குநாணயவுருத் தையல் : சிறிய பூக்கள், வட்டமான இலைகள், மெல்லிய கோடுகள் போன்றவற்றை அலங்கரிக்க. படம் : மாணவர் படம்

நீள்குறுந் தையல் : ஏதாயினும் அலங்காரத்தை நிரப்புவதற்கு பயன்படுத்தும் தையல் முறையாகும். இங்கு இடைவெளி இல்லாது தைக்கப்படும் அலங்காரமாகும்.

படம் : மாணவர் விடை

**7.**

1) மாணவர்களின் தரம் 1, தரம் 4, தரம் 7, தரம் 10

2) குருதிச்சோகை - பூச்சி மருந்துவழங்கல், போமிக்கமிலம், விற்றமின் C வழங்கல், இரும்புச்சத்து வில்லை வழங்கல்

கருத்தரங்கு, போஸ்டர்கள், கண்காட்சி மூலம் மாணவர்களுக்கு அறிவுறுத்தல்.

பார்வைக் குறைபாடு : உயிர்ச்சத்து A நூறாயிரம் சர்வதேச அலகு வாய்வழியாக வழங்கப்பட்டது, தீவிர பார்வைக் குறைபாட்டினால் பாதிக்கப்பட்டவருக்கு தீர்வைப் பெற்றுக்கொடுத்தல், பாடசாலைமட்டத்தில் போஸ்டர், கண்காட்சி, கருத்தரங்கு நடாத்தல்

3) குடும்ப சுகாதாரபணியகம், உலகசுகாதார கல்விப்பணியகம், உலகவங்கி, போசணை தொடர்புபடுத்தப் பிரிவு, சுகாதார ஆராய்ச்சி நிறுவனம், உலக சுகாதார நிறுவனம், இலங்கை போசணைச் சங்கம், அரசசார்பற்ற நிறுவனங்கள்



agaram.lk

Scanned with CamScanner